DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.345/2019

PROSECUTION WITNESS L.W.1/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்துரு | தகப்பனார் பெயர் | கருப்பையா |
| கிராமம் | சத்தியமங்கலம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**எதிரிக்கு எதிராக பிடிக்கட்டளை நிலுவையில் உள்ளது. குவிமுச பிரிவு 299 ன் கீழ் சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 20.08.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன்.

2) இறந்து போன ரசீத்தை எனக்கு தெரியும். தேதி ஞாபகம் இல்லை. கடந்த 2006 ம் ஆண்டு ஈரோடு வ.உ.சி பார்க்கில் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்காக நானும், பாலமுரளி, குமார், ரவிவர்மன், பாபு, பாஸ்கர் ஆகியோர் சென்றிருந்தோம். விளையாட்டு போட்டிகள் முடிந்த பின்பு நாங்கள் நீச்சல் குளத்திற்கு குளிக்க சென்றோம். நாங்கள் சென்று அரை மணி நேரம் கழித்து இரசீத்தும் நீச்சல் குளத்திற்கு வந்தார். நாங்கள் குளித்து முடித்துவிட்டு வெளியே உடை மாற்றிக் கொண்டிருந்தபோது, இரசீத் நீச்சல் குளத்தில் 12 அடி ஆழம் இருக்கும் பகுதியில் கிடப்பதாக அவரை வெளியே நீச்சல் குளத்துக்காரர்கள் எடுத்த போது பார்த்தோம். ரசீத்தை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு ஆட்டோவில் எடுத்துச் சென்றோம். ரசீத் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர் கூறினார். நீச்சல் தெரியாமல் ஆழமான பகுதிக்கு சென்றதால் ரசீத் இறந்துவிட்டார். சம்பவம் தொடர்பாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 30.03.2006 ம் தேதி, காலை 8.00 மணிக்கு நானும், இறந்துபோன ரசீத், பாபு, ரவிவர்மன், குமார், பாஸ்கரன் ஆகியோரும் சத்தியமங்கலத்திலிருந்து புறப்பட்டு வ.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வந்தோமா என்றால் ஆமாம். பின்பு விளையாட்டு போட்டிகளில் கலந்து விளையாடி விட்டு, மதியம் 3.00 மணியளவில் வ.உ.சி பூங்கா விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல் குளத்தில் குளிப்பதற்காக நானும் எனது மேற்சொன்ன நண்பர்களும் டிக்கெட் வாங்கிக் கொண்டு குளிக்க சென்றோமா என்றால் முதலில்

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.08.20 18:18:57 +0530

நாங்கள் மட்டும் சென்றோம், கடைசியாக தான் ரசீத் வந்தார். அப்போது நீச்சல் தெரியாத இறந்து போன ரசீத்தும் எங்களுடன் நீச்சல் குளத்தில் இறங்கினாரா என்றால் இல்லை, அவர் சிறிது நேரம் கழித்து தான் நீச்சல் குளத்திற்கு வந்தார். பின்னிட்டு நாங்கள் குளித்துவிட்டு மேலே வந்து துணி மாற்றிக் கொண்டு இருந்தபோது, ரசீத் நீச்சல் குளத்தில் தான் இருந்தாரா என்றால் ஆமாம். அப்போது நான் சிறிது நேரம் கழித்து பார்த்தபோது ரசீத் நீச்சல் குளத்தில் காணவில்லையா என்றால் ஆமாம். பின்பு நானும் என்னுடன் வந்தவர்களும் நீச்சல் குளத்தில் இறங்கி தேடி பார்த்தபோது இரசீத் தண்ணீரில் மூழ்கி இறந்திருந்தாரா என்றால் எனக்கு நீச்சல் தெரியாததால் நான் இறங்கவில்லை, பாலமுரளி இறங்கி தேடினார். பாலமுரளியும், நீச்சல் குளத்துக்காரர்களும் ரசீத்தை வெளியே கொண்டு வந்தார்கள். பின்னிட்டு ரசீத்தை அருகில் இருந்த நல்லி மருத்துவமனை சென்று மருத்துவமனையில் சேர்த்தபோது அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக கூறினாரா என்றால் ஆமாம். எதிரி ஆனந்தகுமார், மற்றும் நீர் காப்பாளர் எதிரி வெங்கடேஷ் மற்றும் ராஜகோபால் தங்களது பணிகளை சரிவர செய்யாமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இருந்ததால் தான் இரசீத்துக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு, இரசீத் இறந்ததற்காக காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு தற்போது எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் எதையும் பார்க்கவில்லை என்றும் மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.08.20 18:19:02 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.345/2019

PROSECUTION WITNESS L.W.2/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாபு | தகப்பனார் பெயர் | இணையதுல்லா |
| கிராமம் | சத்தியமங்கலம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | டிரைவர் | வயது | |

**எதிரிக்கு எதிராக பிடிக்கட்டளை நிலுவையில் உள்ளது. குவிமுச பிரிவு 299 ன் கீழ் சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 20.08.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன்.

2) இறந்து போன ரசீத்தை தெரியும். சுமார் 20 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வஉசி பூங்காவில் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்காக நான், ரசீத் மற்றும் சிலர் சென்றிருந்தோம். அப்போது அங்கிருந்த நீச்சல் குளத்தில் குளித்தபோது ரசீத் இறந்துவிட்டார். அவரது இறப்பிற்கு யாரும் காரணம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 30.03.2006 ம் தேதி, காலை 8.00 மணிக்கு நானும், இறந்துபோன ரசீத், சந்துரு, ரவிவர்மன், குமார், பாஸ்கரன் ஆகியோரும் சத்தியமங்கலத்திலிருந்து புறப்பட்டு வஉசி பூங்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வந்தோமா என்றால் ஆமாம். பின்பு விளையாட்டு போட்டிகளில் கலந்து விளையாடி விட்டு, மதியம் 3.00 மணியளவில் வஉசி பூங்கா விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல் குளத்தில் குளிப்பதற்காக மேற்சொன்ன நண்பர்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டு குளிக்க சென்றார்களா என்றால் ஆமாம். நீச்சல் தெரியாத இறந்து போன ரசீத்தும் அவர்கள் நீச்சல் குளத்தில் இருப்பதை தெரிந்து கொண்டு இருவரும் சென்று டிக்கெட் வாங்கிக் கொண்டு நீச்சல் குளத்தில் இறங்கினோமா என்றால் இல்லை, ரசீத் நீச்சல் குளத்திற்கு சென்றதே எனக்கு தெரியாது. பின்னிட்டு எனது நண்பர்கள் குளித்துவிட்டு மேலே வந்து துணி மாற்றிக் கொண்டு இருந்தபோது, ரசீத்தும், நானும் நீச்சல் குளத்தில் தான் இருந்தோமா என்றால்

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.08.20 18:19:15 +0530

இல்லை. அப்போது நான் ஆழமில்லாத இடத்தில் நின்று கொண்டிருந்தபோது, இரசீத் மட்டும் ஆழமான இடத்திற்கும், அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தாரா என்றால் தெரியாது. சிறிது நேரம் கழித்து பார்த்தபோது ரசீத் நீச்சல் குளத்தில் காணவில்லையா என்றால் நான் நீச்சல்குளத்திற்கு செல்லவில்லை. பின்பு நானும் என்னுடன் வந்தவர்களும் நீச்சல் குளத்தில் இறங்கி தேடி பார்த்தபோது இரசீத் தண்ணீரில் மூழ்கி இறந்திருந்தாரா என்றால் இல்லை, ஆனால் பின்னர் ரசீத் நீச்சல்குளத்தில் இறந்து கிடந்ததை கேள்விபட்டு சென்று பார்த்தேன். பின்னிட்டு ரசீத்தை அருகில் இருந்த நல்லி மருத்துவமனை சென்று மருத்துவமனையில் சேர்த்தபோது அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக கூறினாரா என்றால் ஆமாம். எதிரி ஆனந்தகுமார், மற்றும் நீர் காப்பாளர் எதிரி வெங்கடேஷ் மற்றும் ராஜகோபால் தங்களது பணிகளை சரிவர செய்யாமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இருந்ததால் தான் இரசீத்துக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு, தற்போது எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் எதையும் பார்க்கவில்லை என்றும் மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.08.20 18:19:19 +0530

Judicial Magistrate No.I,

Erode.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.345/2019

PROSECUTION WITNESS L.W.3/P.W.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாஸ்கரன் | தகப்பனார் பெயர் | குப்புராஜ் |
| கிராமம் | சத்தியமங்கலம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | பொறி கடை | வயது | |

**எதிரிக்கு எதிராக பிடிக்கட்டளை நிலுவையில் உள்ளது. குவிமுச பிரிவு 299 ன் கீழ் சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 20.08.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். பொறி கடையில் வேலை செய்து வருகிறேன்.

2) இறந்து போன ரசீத்தை தெரியும். சுமார் 18 வருடங்களுக்கு முன்பு ஈரோடு வஉசி மைதானத்தில் விளையாட்டு போட்டிகள் நடந்தது. நானும் எனது நண்பர் குமாரும் விளையாட்டு போட்டிகளை பார்த்துவிட்டு, அங்கிருந்த நீச்சல் குளத்தில் குளிக்க சென்றோம். ரசீத்தை காணவில்லை என அவரது நண்பர்கள் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்போது ரசீத் நீச்சல்குளத்தில் பேச்சு மூச்சின்றி கிடந்தார். அவரை வெளியே தூக்கும் போது தான் நான் பார்த்தேன். அவர் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 30.03.2006 ம் தேதி, காலை 8.00 மணிக்கு நானும், இறந்துபோன ரசீத், பாபு, ரவிவர்மன், குமார், சந்துரு ஆகியோரும் சத்தியமங்கலத்திலிருந்து புறப்பட்டு வஉசி பூங்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளை காண வந்தோமா என்றால் ஆமாம். பின்பு விளையாட்டு போட்டிகளை பார்த்து விட்டு, மதியம் 3.00 மணியளவில் வஉசி பூங்கா விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல் குளத்தில் குளிப்பதற்காக நானும் எனது நண்பர்களும் டிக்கெட் வாங்கிக் கொண்டு குளிக்க சென்றோமா என்றால் நானும் குமாரும் மட்டும் தான் குளிக்க சென்றோம். அப்போது நீச்சல் குளத்தில் நாங்கள் இருப்பதை தெரிந்து கொண்ட பாபு மற்றும் இறந்து போன ரசீத்தும் எங்களுடன் நீச்சல் குளத்தில் இறங்கினரா என்றால் நான் அதை பார்க்கவில்லை. பின்னிட்டு நாங்கள் குளித்துவிட்டு மேலே வந்து துணி மாற்றிக்

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.08.20 18:19:29 +0530

கொண்டு இருந்தபோது, ரசீத்தும், பாபுவும் நீச்சல் குளத்தில் தான் இருந்தானா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது சிறிது நேரம் கழித்து பாபு எங்களிடம் வந்து ரசீத்தை நீச்சல் குளத்தில் காணவில்லை என்று கூறினாரா என்றால் இல்லை, ஆனால் தேடிக் கொண்டிருந்தார்கள். பின்பு நானும் என்னுடன் வந்தவர்களும் நீச்சல் குளத்தில் இறங்கி தேடி பார்த்தபோது இரசீத் தண்ணீரில் மூழ்கி இறந்திருந்தாரா என்றால் அவரை எல்லோரும் சேர்ந்து வெளியே தூக்கும்போது தான் பார்த்தேன். பின்னிட்டு ரசீத்தை அருகில் இருந்த நல்லி மருத்துவமனை சென்று மருத்துவமனையில் சேர்த்தபோது அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக கூறினாரா என்றால் ஆமாம். எதிரி ஆனந்தகுமார், மற்றும் நீச்சல்குள காப்பாளர் எதிரி வெங்கடேஷ் மற்றும் ராஜகோபால் தங்களது பணிகளை சரிவர செய்யாமல் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இருந்ததால் தான் இரசீத்துக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரசீத்துக்கு நீச்சல் தெரியுமா, இல்லையா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு, தற்போது எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் எதையும் பார்க்கவில்லை என்றும் மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.08.20 18:19:34 +0530

Judicial Magistrate No.I,

Erode.